# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **46**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

*மாவீரன் திப்புவை வீழ்த்தி, தென்னிந்தியாவில் அசைக்கமுடியாத இடத்தை ஆங்கிலேயர்கள் பிடித்த பின்னர், 1822-இல் முதன்முதலாக சென்னை மாகாணத்தின் மக்கள்தொகை ஒரு கோடியே 34 லட்சத்து 76 ஆயிரத்து 923 எனக் கண்டறியப்பட்டது. இருப்பினும், 1822-இல் நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முழுமையானதல்ல. முழுமையான மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணி 1871-ஆம் ஆண்டு முதல் 1931-ஆம் ஆண்டு வரை நடந்தது. அதன்படி 1871-இல் சென்னை மாகாணத்தின் மக்கள்தொகை 3 கோடியே 15 லட்சத்து 97 ஆயிரத்து 872 எனக் கண்டறியப்பட்டது.*

*1871 முதல் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, 1881, 1891, 1901, 1911, 1921, 1931- ஆம் ஆண்டுகளில் அறிக்கைகள் வெளியாகின. அவ்வாறு வெளியான மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள் பல்வேறு தகவல்களை வெளிக்கொண்டு வந்தன. ஒட்டுமொத்த மக்கள்தொகை, இருப்பிட நிலை, தொழில், பாலினம், வயது, கல்வி, மொழி, நோய், வாழ்நிலை, சாதி உள்ளிட்ட பல்வேறு தகவல்களை உள்ளடக்கி, மக்கள்தொகை அறிக்கைகள் ஒவ்வொரு முறையும் புதிய மாற்றங்களுக்கு விதையாக அமைந்தன.*

*1871-ஆம் ஆண்டு முதன்முதலாக முழு அளவில், மக்கள்தொகைக் கணக்கிடப்பட்டாலும், இந்தியாவின் ஏனைய மாகாணங்களை ஒப்பிடுகையில், சென்னை மாகாணத்தில் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணி ஒப்பீட்டளவில் எளிதாக இருந்தது. ஏனெனில், அதற்கு முன்பிருந்தே மாவட்ட அளவில் வருவாய்த் துறை ஐந்தாண்டுக்கு ஒருமுறை மக்கள்தொகையைக் கணக்கிட்டு வந்தது.*

*1871-இல் அந்த முறை மாற்றப்பட்டு, கணக்கெடுப்பு நடத்தப்படும் வீட்டுக் கதவுகளில் வண்ணம் பூசப்பட்டபோது, 'ஆங்கிலேய அரசு புதிய வரி விதிக்கப் போகிறது' என மக்கள் பயங்கொண்டனர். மக்கள் பயந்தபடி அரசு புதிய வரிகளை விதிக்காமல், மக்கள் தொகையை மட்டும் கணக்கிட்டதால், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மக்களின் பெருவாரியான பங்கேற்புடன் நடந்தது.*

### சாதியத்தின் தோற்றம்

*1871-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை, சாதி பற்றி சுவாரஸ்யமான உண்மைகள் பலவற்றை வெளிக்கொண்டு வந்தது. 'பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், சாதிமுறைக்கு வெளியில் உள்ளவர்கள் என்று ஐந்து பிரிவுகளாக இந்துச் சமூகம் பிரிந்து கிடக்கிறது' என்பதை ஏற்றுக்கொண்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் துறையினர் சாதிய அமைப்பு பிராமணியத் தத்துவத்தில் துவங்கியது என்று அறிவித்தனர்.*

*விவசாயி, ஆடு-மாடு மேய்ப்பவர், கைவினைஞர், எழுத்தர் அல்லது கணக்கர், நெசவாளர், குயவர், கலப்புச் சாதிகள், மீனவர்கள் அல்லது வேடர்கள், பனைத் தொழில் புரிவோர், நாவிதர், வண்ணார், அடிமைச் சாதியினர், பறையர் அல்லது கீழ்ச் சாதியினர் ஆகிய 13 வகைகளில் சூத்திரர், சாதிமுறைக்கு வெளியில் உள்ளவர்கள் அடங்குவர் என்று ஆங்கிலேய அரசு அறிவித்தது. மேற்குறிப்பிட்ட 13 பிரிவுகளில் வராதவர்கள் மற்ற சாதியினர் (Other Castes) என்று வகைப்படுத்தப்பட்டனர்.*

ஓவியம் : ரவி பேலட்



# ஆதிக்கத்தை நிலைநிறுத்த எழுதப்பட்ட சட்டங்கள்!

### பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட இடம்

*ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில், பிராமணர்கள் தலைசிறந்தவர்கள் என்று நிலைநிறுத்த ஒட்டுமொத்த பண்டைய இந்துச் சட்டங்கள் எழுதப்பட்டன. இந்துக்கள் என்று கருதப்பட்டவர்களிடையே உயர்ந்த இடம் என்பதில், திருப்தியடையாத பிராமணர்கள், கடவுளுக்கு இணையான இடத்தைக் கோரினர். பிராமணர்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள் என்று நிறுவ விரும்பினர். அதற்கேற்ற வகையில், சட்டங்களும், இலக்கியங்களும், புராணங்களும் எழுதப்பட்டன. அவை நடைமுறையாகவும் மாற்றப்பட்டன. அவற்றை மீறியவர்களுக்குக் கடும் தண்டனை தரப்பட்டது.*

*எடுத்துக்காட்டாக, மனுவின் சட்டப்படி குற்றங்களை விசாரித்து, நீதி வழங்குபவர்கள் பிராமணர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்குவதைக் கற்பனையில் கூட யோசித்துப் பார்க்க இயலாது. ஏனெனில், எவ்விதக் குற்றம் செய்தாலும், பிராமணர்களுக்கு மரண தண்டனை கிடையாது. அவர்களுக்கு அதிகபட்சம் அபராதம் விதிக்கலாம் அல்லது நாடு கடத்தலாம். ஆனால், பிராமணனைத் துன்புறுத்தும் சூத்திரனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும். ஒரு பிராமணனின் மனைவியுடன் உடலுறவு வைத்துக்கொண்ட குற்றத்திற்காக சூத்திரனுக்கு மரண தண்டனை விதிக்கலாம். சூத்திரனின் மனைவியுடன் அதே குற்றத்தைச் செய்யும் பிராமணன் அபராதம் செலுத்திவிட்டு, தவம் செய்ய வேண்டும்.*

> **ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அவர்களுக்குச் செல்வமும் அறிவும் கிடைத்தன. அவ்வாறு அறிவும் செல்வமும் பெற்றோர் சாதிய அமைப்பினால் தங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவு, கொடுங்கோன்மைத் தன்மை கொண்டது, நியாயமற்றது என்று நிரூபிக்க விரும்பினர். ஒன்றுபட்டனர். மாற்றம் காத்திருந்தது.**

*சூத்திரன், பிராமணன் அருகில் உட்காரத் துணிந்தால், பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் அவனுக்குச் சூடு வைக்க வேண்டும், சூத்திரன், பிராமணனின் தாடி அல்லது தலைமுடியைப் பிடித்து இழுத்தால் அல்லது கழுத்தை நெரித்தால், அவன் கைகளை வெட்ட வேண்டும். மனு குறிப்பிட்டுள்ள நீண்ட குற்றப்பட்டியலில், அக்குற்றச் செயலில் ஈடுபடும் பிராமணன் சிறிதளவு தண்டனை அனுபவித்தால் போதும். சத்திரியன், வைசியன், சூத்திரன் என்று கீழே செல்லச்செல்ல கீழ் வர்ணத்தார் கடுமையான தண்டனை அனுபவிக்கவேண்டும். ஆனால், மற்றவர்களை ஒப்பிடுகையில், சூத்திரன் மிகக் கடுமையான தண்டனை அனுபவிக்கவேண்டும்.*

*பிராமணர்களுக்குச் சேவை செய்வது சூத்திரனின் மிக உயர்ந்த பாக்கியமாக கூறப்பட்டது. எஜமானரின், அதாவது பிராமணனின் விருப்பப்படி சூத்திரன் நடந்துகொண்டால், எல்லா பாவங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கும். சூத்திரனை அவமானப்படுத்துவது மட்டுமல்ல, புனிதமாகக் கருதப்பட்ட வேதங்களைப் படிக்கவோ, காதால் கேட்கவோ மனுவின் சட்டம் தடை விதித்தது. பிராமணனைத் தவிர, வேறு யாரும் வேதம் கற்பிக்க முடியாது. வேதம் கற்பிப்பவர்கள், அர்ச்சகர்கள் பிராமண குலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். சூத்திரன், தான் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றிபெற விரும்பினால், அதைப் பிராமணர்களின் தயவில் மட்டுமே எட்டமுடியும். அதற்காகப் பிராமணர்களுக்கு விருந்தளித்து, அல்லது பரிசளித்து மகிழ்விக்கவேண்டும், இல்லையெனில், எப்படி முயற்சி செய்தாலும், கடுமையாக உழைத்தாலும் சூத்திரர்களுக்கு வெற்றி கிட்டாது.*

*இவையெல்லாம் மனுவின் சட்டங்களில் எழுதப்பட்டிருந்தவை. உயர்சாதியினரான பிராமணர்களால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தன. வெளிப்பிரதேசம் சென்று பொருளும் பணமும் சம்பாதித்த கீழ்ச்சாதியினர், அப்பணத்தையும் பொருளையும் பிராமணர்களுக்குத் தந்து, தங்களின் பெருமைகளையும் வீர தீரத்தையும் போற்றிப் பாராட்டி எழுதி வாங்கிக் கொண்டனர். அவ்வாறு எழுதியவற்றை, எழுதி வாங்கியவர்கள் பெருமையாகக் கருதினர், ஆனால், எழுதித் தந்தவர்கள் உள்ளிட்ட, மற்ற சாதியினர் அதை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை.*

*இருப்பினும், அவர்கள் சாதிய அமைப்பை எதிர்க்கத் துணியவில்லை. மாறாக, அவர்களைக் கீழானவர்களாக கட்டமைத்த இந்துச் சமூக அமைப்பின் கீழ் தங்களுக்கு மேலான நிலையைக் கோருவதன் மூலம் அவமானத்தை மாற்ற முயன்றனர். எடுத்துக்காட்டாக 'சாணார்கள்' என்று பிராமணர்களால் நடத்தப்பட்ட 'தென்னிந்திய நாடார்கள்' தங்களை* ***'ஆரிய வழித்தோன்றல் சத்திரியர்கள்'*** *என்று அழைத்துக்கொண்டனர்.*

*ஆனால், ஆங்கிலேயர்களின் பதிவு அவ்வாறானதாக இல்லை. உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாக இருந்தது. ஆங்கிலேயர்கள் சமஸ்கிருதத்தில் இருந்த வேதங்களை, சட்டங்களை, இலக்கியங்களை ஆங்கிலத்திற்கு மாற்றி, வெகுமக்கள் பார்வைக்கு வைத்தனர்.*

*இந்துச் சமூகம் செயல்படும் முறையை உலகிற்கு அறிவித்தனர். இவற்றால் விழிப்புணர்வு பெற்ற பாதிக்கப்பட்ட மக்கள் வெகுண்டு எழுந்தனர். இனியும் இதைத் தொடரவிடக் கூடாது என்று உறுதியேற்றனர்.*

*பிராமணர்களால் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஒதுக்கப்பட்ட கீழ்மையான சமூகநிலை குறித்து, தாழ்த்தப்பட்ட சாதியினர் அவமானமடைந்தனர். ஏனெனில், ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அவர்களுக்குச் செல்வமும் அறிவும் கிடைத்தன. அவ்வாறு அறிவும் செல்வமும் பெற்றோர் சாதிய அமைப்பினால் தங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவு, கொடுங்கோன்மைத் தன்மை கொண்டது, நியாயமற்றது என்று நிரூபிக்க விரும்பினர். ஒன்றுபட்டனர். மாற்றம் காத்திருந்தது.*

**...குரல் ஒலிக்கும்**

## வளர்ச்சியும் இழப்பும் - செய்ய வேண்டிய வேலையும்...

**வ**ளர்ச்சித் திட்டங்களால் ஏற்படும் விளைவுகளும், அவற்றில் நமது பார்வை எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும் பத்திரிகையாளர் நெல்சன் சேவியரின் முகநூல் பதிவிலிருந்து.

“லட்சக்கணக்கான இளைஞர்களின், குடும்பங்களின் எதிர்காலத்தை உறுதிசெய்திருக்கிற, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை சென்னையிலேயே தக்கவைக்கும் பொருட்டு, ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளையும் நிலங்களையும் அரசிடம் கொடுத்தபின்னர்தான் நிலம் கையகப்படுத்தப்பட்டு, ராஜீவ் காந்தி சாலை உருவானது.

ஒவ்வொரு குடும்பமும் இழப்பீட்டைப் பெற்றாலும்கூட, தாங்கள் வாழ்ந்த இடத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ளனர். அதன்மீதுதான் தமிழ்நாடு ஐ.டி.துறை தற்போது செழித்து வளர்ந்திருக்கிறது. சிறுசேரியில் அமைக்கப்பட்ட 2,000 ஏக்கர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவுக்கும் இதே நடைமுறைதான். சென்னை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலைக்காக நிலங்களை இழந்தவர்களே ஆயிரக்கணக்கானோர்.

சாலைகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்பேட்டைகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், பல்கலைக்கழகங்கள் என நாம் இன்று பயன்படுத்தி வரும் எந்தக் கட்டமைப்பை உருவாக்கினாலும், அதற்கான சமூக, பொருளாதார, சூழலியல் இழப்பை நாம் சந்தித்தே தீர வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை இப்போது இருக்கும் இடமே நீர்நிலை இருந்த இடம்தான்.

நிலம் கையகப்படுத்தும்போது அரசுகள் முறையான இழப்பீடு வழங்குவதை உறுதிசெய்வதும், சட்டம் வலியுறுத்தும் எல்லா விதிகளையும் முறையாகப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்காணிப்பதும்தான் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் இப்போது செய்தாக வேண்டியது. சமரசமில்லாமல் இதைச் செய்வதே முதன்மையானதாக இருக்க வேண்டும்.

நகரமயமாக்கலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதேநேரத்தில், பெங்களூரு, ஹைதராபாத் நகரங்களை விட, நம் சென்னை ஏற்கனவே பத்தாண்டுகள் பின்னால் இருக்கிறது. சென்னையின் இந்த இரண்டாவது விமான நிலையமே 15 ஆண்டுகளுக்கு முன்பாக வந்திருக்க வேண்டியது.

தேசிய அளவில் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளும் எல்லா முயற்சிகளும் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, நீங்களும் அவர்களோடு கை கோர்க்காதீர்கள் நண்பர்களே.” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்

### தாத்தாவின் வழியில் பேரனின் பயணம்!



1969-ஆம் ஆண்டு எனது பெற்றோரின் திருமண அழைப்பிதழைக் கழகத் தலைவர் அவர்களிடம் கொடுக்க, என்னுடைய தாத்தா டி.என்.எம் நடராசன் அவர்கள் 'கோபாலபுரம் இல்லம்' சென்றார். அழைப்பிதழைத் தலைவரிடம் காண்பித்துக் கொண்டிருந்த தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. எனது தாத்தா நடராசன் அவர்கள் கழகம் தொடங்கப்பட்ட காலம் முதல், அவரது இறுதிகாலம் வரை நகரச் செயலாளராகப் பணியாற்றியவர். அவரின் வழியில் இன்றைக்கு நாங்களும் தொய்வின்றிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

**- எஸ்.பி.இளஞ்செழியன், வார்டு கவுன்சிலர், வத்தலகுண்டு ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்.**



எஸ்.பி.இளஞ்செழியன்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சிந்தனைக் கருவூலம்!

1958-ஆம் ஆண்டு சென்னை, பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில், நடைபெற்ற கூட்டத்தில் 'சிந்தனை' என்ற தலைப்பில் உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா.“சிந்தனை என்பது காலத்துக்குக் காலம் மாறும், அவரவர் கொண்டுள்ள கருத்துக்கு ஏற்ப மாறும்”எனக் கூறிய அண்ணா, 'அல்ஜீரிய விடுதலைப் போர் முதல் அலெக்சாண்டர் படையெடுப்பு வரை' பல விதமான செய்திகளை, மாணவர்கள் மனதில் அள்ளித் தெளித்தார். அது மாணவர்களின் சிந்தனையை மாற்றியமைக்கும் மருந்தானது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**726**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131